திரு. என். கணபதி : மாண்புமிகு உறுப்பினர் திருமதி பழனியம்மாள் அவர்கள் சீரணிப்படையில் இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

திரு. சொ. காவேரிமணியம் : தலைவரவர்களே, இம்மாதிரியான சீரணித் தலைவர்களுக்கு தனி அலுவலகம் எந்தெந்த மாவட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ? அவர்களுக்கு வாகன வசதி ஏதேனும் அரசின் மூலம் அளிக்கப்பட்டிருக்கிறதா ? வேறு என்னென்ன வசதிகள் அவர்களுக்குச் செய்து தரப்பட்டிருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : மாவட்ட சீரணித் தலைவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, சீரணிப் படையில் பெண்கள் சேர வயது வரம்பு தடையாக இருக்கிறது என்று சொன்னார்கள். முப்பது வயது என்று இருப்பதை 25 வயது என்று குறைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினரின் யோசனை பரிசீலனை செய்யப்படும்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, சீரணிப்படையில் அங்கம் வகிக்கும் பெண்கள் ஆற்றும் பணி என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : பெண் தொண்டர்கள் சக்திக்கேற்றவாறு பணிபுரிகிறார்கள். சத்து உணவு விநியோகித்தல், சாலைகளுக்கு மண் எடுத்துச் செல்லுதல் போன்ற பணிகளை அவர்கள் மேற்கொள்கிறார்கள்.

கடற்கரைப் பகுதிகளில் மீன்பிடிப்பு.

* 70 வினா.—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கடற்கரைப் பகுதிகளில் மீன் பிடிக்கும் இடங்களை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய சர்வே (Survey) ஏதேனும் நடத்தப்படுகிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆம், இராமேஸ்வரம், கடலூர், இராயபுரம், குமரிமுனை ஆகிய இடங்களில் ஆய்வு மற்றும் அண்மைக் கடல் மீன் பிடி நிலையங்கள் அமைக்கப்பட்டு, புதிய

1972 டிசம்பர் 7]

மீன் பிடி இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இவை தவிர இந்திய அரசினரின் ஆழ்கடல் மீன் பிடி நிலேயம் 1958-ல் தூத்துக்குடியில் ஒரு உப நிலேயமும் 1972-ல் சென்னேயில் ஒரு உப நிலேயமும் துவக்கியுள்ளது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலேவரவர்களே, கன்னியாகுமரி முனேயில் சிறந்த முறையில் ஒரு பிஷ்ஷிங் கிரௌண்ட் இருப்பதாக ஆராய்ச்சியிலிருந்து தெரிய வருகிறது. அதை விஸ்தரிக்க அரசு என்னென்ன வழிவகைகளே மேற்கொள்ள இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஏற்கெனவே கன்னியாகுமரியில் ஒரு இன்-ஷோர் பிஷ்ஷிங் நிலேயமும், தூத்துக்குடியில் ஒரு ஆப்-ஷோர் பிஷ்ஷிங் நிலேயமும் துவக்கப்பட்டுள்ளது. மேலும் அதை விரிவு படுத்தும் நிலேயில் நான்கு இழுபரி படகுகளும் கொண்டு வரப்பட இருக்கின்றன. அதைச் சென்னேயில் இருக்கும் நிலேயம் பரிசீலித்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா: தலேவரவர்களே, இந்த மீன் பிடிக்கும் நிலேயங்களே விரிவாக்கும் திட்டத்தினேக் குறிப்பிட்ட சில இடங்களுக்கு மட்டும் தான் திட்டியிருக்கிறீர்கள், அங்கே மட்டும்தான் ஆய்வு நடந்து வருகிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தரங்கம்பாடியில் பிடிக்கும் மீன்கள்தான் அந்த மாவட்டத்தின் பல இடங்களுக்கும் வழங்கப்படுகிறது. ஆகவே, தரங்கம்பாடியையும் மீன் பிடிக்கும் இடங்களில் முக்கியமான இடமாகக் கருதி ஏற்றுக்கொண்டு அதையும் பரிசீலனே செய்து அதைச் செயல் படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: பொதுவாக அந்த ஆய்வு நீண்ட நெடுங்காலமாகவே நமது மாநிலத்தில் நடைபெறுமல் இருந்து வருகிறது. கொஞ்ச காலமாகத்தான் அண்மைக்கடல் மீன்பிடிப்பு பற்றியும் ஆழ்கடல் மீன்பிடிப்பு பற்றியும் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. நான் சொல்லிய நான்கு இழுபரி படகுகள் வந்தபிறகு நமது மாநிலத்தில் வேறு பல இடங்களிலும் எந்த அளவுக்கு அதை நடத்த முடியும் என்பதை அந்த இலாகா பரிசீலித்து வருகிறது. அந்தப் படகு வந்த பிறகு மீன்கள் அதிகமாகப் பிடிக்கமுடியும்.

திரு. அ. இராசமாணிக்கம்: தலேவரவர்களே, நாகப்பட்டினம் பகுதியில் 8,000 பேர்களுக்கு மேல் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிருர்கள். அந்தப் பகுதியையும் சேர்த்துக்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: எல்லாப் பகுதிகளுக்கும் சேர்த்துத்தான் ஆய்வு நடத்தப்படும்.

திரு. ந. தருமலிங்கம் : சட்டப்பேரவை துணைத் தலைவரவர்களே, மீன் பிடிக்கும் இடங்களை ஆய்வு செய்வதற்காக மத்திய அரசு ஏதாவது நிதி உதவி செய்து உள்ளதா ? இதுவரையில் இல்லையென்றால், மத்திய சர்க்காரிடமிருந்து நிதி உதவி பெறுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அனுப்பப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மத்திய அரசாங்கத்தின் சார்பில் 1958-ம் ஆண்டில் தூத்துக்குடியில் ஒரு மீன்பிடி நிலையம் துவக்கப்பட்டது. மற்ற நான்கு இடங்களில் இருக்கும் மீன் பிடி நிலையங்கள் மாநில அரசாங்கத்தைச் சேர்ந்தது.

தடப்பள்ளி, காளிங்கராயன் வாய்க்கால் ஆயக்கட்டு நிலங்கள்.

* 71 வினா.—திரு எ. எம். இராஜா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தடப்பள்ளி, காளிங்கராயன் வாய்க்கால் பாசனம் பெறும் நிலங்களுக்கு 1971ஆம் ஆண்டிற்குப் பின் தண்ணீர் தீர்வை உயர்த்தப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) தடப்பள்ளி வாய்க்கால் பாசனம் பெறும் நிலங்களுக்கு மட்டும் 21—8—1971-ஆம் தேதிக்குப் பின் கீழ்க்கண்ட விவரப்படி தண்ணீர் தீர்வை உயர்த்த ஆணை பிறப்பிக் கப்பட்டுள்ளது. ஆனால் காளியங்கராயன் வாய்க்கால் ஆயக்கட்டு நிலங்களைப் பொறுத்தவரையில் தீர்வையில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை.

(இ) கோயம்புத்தூர் மாவட்டம், கோபிச்செட்டிபாளையம் வட்டத் திலுள்ள தடப்பள்ளி வாய்க்கால், சிங்கியம் கிளை வாய்க்கால், கூகலூர் கிளை வாய்க்கால், அம்மாபாளையம் கிளை வாய்க்கால், அரக்கன் கோட்டை வாய்க்கால் மற்றும் வாணிப்புத்தூர் கிளை வாய்க்கால் ஆகிய பாசனங்கள் 21—8—1971-ஆம் தேதிக்கு முன்பு இரண்டாம் தரமான நீர்நிலைக ளென பாகுபாடு செய்யப்பட்டிருந்தன. இவைகள் கீழ்பவானி அணைக் கட்டு திட்டத்தின்கீழ் வடிகால் நீர், கசிவு நீர் வசதி பெறுவதால் மேற்படி நீர்நிலைகளால் பயன்பெறும் நிலங்களை கீழ்பவானித் திட்டத் தின் கீழுள்ள ஆயக்கட்டாகப் பதிவு செய்யவும், மேற்படி நீர்நிலை களின் பாகுபாட்டை ஒரு படி மேலாக உயர்த்தவும் வருவாய்த்துறை,